# மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்குமாகாணம்

## மாதிரிப்பரீட்சை - 2020

நாடகமும் அரங்கியலும் I

58-T-I

புள்ளித்திட்டம்

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 4 | 11) 3 | 21) 4 | 31) 4 |
| 2) 3 | 12) 4 | 22) 3 | 32) 4 |
| 3) 4 | 13) 3 | 23) 4 | 33) 1 |
| 4) 2 | 14) 2 | 24) 1 | 34) 3 |
| 5) 2 | 15) 1 | 25) 3 | 35) 2 |
| 6) 5 | 16) 2 | 26) 4 | 36) 4 |
| 7) 3 | 17) 4 | 27) 3 | 37) 1 |
| 8) 3 | 18) 3 | 28) 1 | 38) 3 |
| 9) 5 | 19) 4 | 29) 2 | 39) 2 |
| 10) 4 | 20) 5 | 30) 1 | 40) 3 |

### பகுதி II

**01.**

| கலை | கைவினை |
|---|---|
| 1. மீளுருவாக்கம் செய்யமுடியாதது. | 1. மீளுருவாக்கம் செய்யக்கூடியது. |
| 2. அழகியற்கலை. | 2. அலங்காரக் கலை. |
| 3. பிரதியீடு இல்லாதது. | 3. பிரதியீடு உள்ளது. |
| 4. படைப்பாக்கத்துடன் தொடர்புடையது. | 4. செய்தல் எனும் செயற்பாட்டுடன் தொடர்புடையது. |
| 5. சுவைஞரின் மனதில் ஆழ்ந்தபதிவை ஏற்படுத்தும். | 5. நுகர்வோர் மனதில் தூண்டி துலங்கல் பதிவுகளை ஏற்படுத்தும். |
| 6. அழகியலை முதன்மைப்படுத்தும். | 6. பயன்பாட்டை முதன்மைப்படுத்தும். |
| 7. கற்பனையுடன் கூடியது. | 7. ஒப்பீட்டளவில் குறைவு. |
| 8. கலைப்படைப்பின் மனஎழுச்சி மற்றும் உணர்ச்சி போன்ற மூலக்கூறுகள் மேலோங்கிக் காணப்படும். | 8. கைவினையில் அவ்வாறில்லை. |
| 9. கலைப்படைப்பில் எதிர்பார்க்கின்ற வடிவமுழுமையைப் பெறமுடியாதிருக்கும். | 9. கைவினையில் எதிர்பார்க்கின்ற வடிவமுழுமையைப் பெறமுடியும். |
| 10. கலைப்படைப்பை ஆக்குவோரின் உளவியற் கோலங்கள் அதனைச் சுவைப்போருக்கு நேரடியாக | 10. கைவினையில் அவ்வாறில்லை. |

ஊடுகடத்தப்படுகின்றது.

11. கலைப்படைப்பின் உருவாக்கப் படிமுறை சார்ந்து ஆரம்பம் முதல் முடிவுவரை நெகிழ்ச்சித்தன்மை காணப்படும்.

11. கைவினையின் உருவாக்கப் படிமுறை சார்ந்து ஆரம்பம் முதல் இறுதிவரை திட்டவட்டமான வரையறை காணப்படும்.

இது போன்ற பத்து வேறுபாடுகள் எழுதியிருக்க வேண்டும்.

**2.** பாரம்பரிய அரங்குகளின் தோற்றத்திற்கு துணை செய்த பண்பாட்டு அம்சங்கள் குறிப்பிட்டு விளங்கி இருத்தல் வேண்டும்.

- மக்கள் குழுமங்களின் நம்பிக்கை சார்ந்த விடயங்கள்.
- கூடிக் கருமமாற்றுதல், கூட்டுணர்வு, ஒற்றுமை சார்ந்த விடயங்கள்.
- நெருக்கடி நிலைமைகளில் சமூகங்கள் தொழிற்படும் விதம்
  உ + ம் :- மழைவளம் வேண்டுதல், நோய் தீர்த்தல்.
- சமூக ஒன்றிணைப்புக்கு எதிரான விடயங்களை எவ்வாறு கையாளுதல்
- மரபுகளைப் பேணுதல்.
- பண்பாட்டைப் புதுப்பித்தல், கையளித்தல், வலியுறுத்தல்.
- புதிய சக்கியைப் பேணுதல்......

நவீன அரங்குகளின் தோற்றத்திற்கு பின்புலமாய் அமைந்தகாரணிகள் தனியாகக் குறிப்பிட்டு விளக்கியிருத்தல் வேண்டும்.

- மத்தியதர வர்க்கத்தின் உருவாக்கம்.
- நுகர்வுக் கலாசாரம்.
- மாறிவரும் இரசனை.
- சமூக, பொருளாதார, அரசியல் முரண்பாடுகள்.
- இயற்கை அனர்த்தங்கள்.
- தனிமனித மேலாண்மைப் போக்குகள்.
- ஒடுக்கப்பட்ட மக்கள்.
- மனித உரிமைகள் மீறப்படல் ...... போன்ற சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டி விளக்கியிருத்தல் வேண்டும்

**3.** நவீன அரங்குகளிலே பாரம்பரிய அரங்குகள் பயன்படுத்தப்படுகின்ற முறைகள் எடுத்துக் கூறி விளக்குக.

1. கட்டியகாரன் முறையில் இருந்து உரைஞர் தோற்றம் பெற்றமை.
2. நாடகமுடிவின் போது வணக்கம் செலுத்துதல்.

3. இசைநாடக மரபினைப் போன்று நவீன நாடகங்களுக்கிடையில் பாடல்கள் பயன்படுத்தப்படுதல்.
4. பாடல்களில் கூத்து மெட்டுக்கள் இசைநாடக மெட்டுக்கள் பயன்படுத்தப்படுதல்.
5. கூத்தின் ஆட்டக் கோலங்களைப் பயன்படுத்துதல்.
6. புராண இதிகாசங்களில் இருந்து கதைக்கான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளப்படுதல்.
7. கூத்துருவ நாடகங்களின் தோற்றம்.
8. விசேட கூத்தின் தோற்றம் இது போன்ற விடயங்கள் சுட்டிக்காட்டி விளக்கியிருத்தல் வேண்டும்.

**02**. 1. இயற்பண்பு, யதார்த்த அரங்குகளின் தோற்றத்திற்கு பின்புலமாய் அமைந்த காரணிகள் கூறப்பட வேண்டும்.

1. கைத்தொழில் புரட்சியின் விளைவுகள்
2. நகரமயமாக்கல்.
3. வேலையின்மை.
4. குழந்தை தொழிலாளரின் உருவாக்கம்.
5. நோய், துன்பம், வறுமை.
6. சார்ள்ஸ் டார்வினின் கூர்ப்புக் கொள்கை.
7. நெப்போலியனின் வீழ்ச்சி.
8. நியூட்டனின் கிளாசிக்கல் மெக்கானிசம்.

2. முறைமைக் கோட்பாடு பற்றியும், (IF) நுட்பம் தொடர்பாகவும், முறைமைக் கோட்பாட்டில் உள்ளடங்கும் 10 வகையான நுட்பங்களும் குறிப்பிட்டு விளக்கப்பட்டிருக்க வேண்டும்.

1 கற்பனைப் பாவனை நிலை
2- தரப்படும் சூழல்
3 கற்பனை செய்தல்
4 தளர்வு நிலை
5 தசைகளின் தளர்நிலை
6 பிரச்சினைகளைத் துண்டு துண்டாக்கல்
7 உண்மையும் நம்பிக்கையும்
8 உணர்வுபூர்வமான ஞாபகங்கள்
9 தொடர்புகொள்ளல்
10 புறவிடயங்கள்

3. ஆடல்கள், பாடல்கள், குறியீடுகள் ஆக்கியல் அசைவுகள், சொல்லாடல் முறைகள், உயிர்ப்பொறிமுறை நுட்பங்கள், அதற்கான உடல், குரல், உளம் சார்ந்த பயிற்சிகள் அரங்க விளையாட்டுக்கள் ….. போன்ற விடயங்கள் குறிப்பிட்டு பரீட்சார்த்தியின் சொந்த அனுபவம் அதற்கான செயற்பாடுகள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

**03.** 1. சமஸ்கிருத அரங்குகளான சதுஸ்ர, விகுஸ்ர, திரியஸ்ர அரங்குகளில் ஏதாவது ஒன்றின் அரங்க வெளி குறிப்பிடப்பட வேண்டும். அதில் ரங்கமண்டல, நேபத்யகிருக, ரங்கசிரஸ், மத்தவராணிகள், ரங்கபீடம் என்பன உரிய அளவுகளில் குறிப்பிடப்பட வேண்டும். மேற்குறித்த

பகுதிகளோடு இணைந்ததாக ஆற்றுகை முறை அமய வேண்டும். பார்வையாளர் துலங்கல்கள் நால்வகை வர்ணத்தினர்க்கு ஏற்ப குறிப்பிடப்பட வேண்டும்.

2. நோ அரங்கில் அதன் அரங்க வெளியும் கண்ணாடி அறையும், திரை, பாலப்பாதை (ஹசிககாரி), ஷிற்றேயின் தூண், மேடைஉதவியாளர் பாடுனர் குளரம், இசைஞர்கள் பைன்மர ஓவியம், ஒப்பனை அறைக்கதவு, படி, பார்வையாளர் என்பன குறிப்படப்பட வேண்டும். ஆற்றுகை மூன்று பக்கப் பார்ப்போரை மையப்படுத்தியதாகவும் மேற்குறித்த பகுதிகளை இணைத்ததாகவும் விளக்க வேண்டும் பார்வையாளர் துலங்கலும் அவ்வாறே.

**04**. ஆக்க பூர்வமான விமர்சனத்திலே கரு, கட்டமைப்பு (Plot), சொல்லாடல், பாத்திரம், செய்கை / நடிப்பு, காண்பியங்கள் வெளி கலைஞர்கள், பார்ப்போர் போன்ற விடயங்களை உள்ளடக்கி விளக்கியிருத்தல் வேண்டும்.

**05.** எதிர்வீர சரத்தந்திரவின்

* நாடு காண்பயணங்கள்.
* மரபு சார்ந்த விடயங்களுடன் நவீனத்தை இணைத்தவிதம்.
* கிரேக்கத்தில் பயன்படுத்தியதைப் போன்று கோரசை மனமே சிங்கபாகுவில் பயன்படுத்தியமை.
* பொத்தே குருவை அறிமுகம் செய்தமை.
* கொடூர குணங்களை விடுத்து மனிதாபிமானப் பாத்திரங்களைப் படைத்தமை.
* பலவகை இசைக்கருவிகளைப் பயன்படுத்தியமை.
* வேட உடை ஒப்பனையில் ஏற்படுத்திய மாற்றம்.
* ஒளியமைப்பில் நவீனத்துவத்தை கையாண்டமை.
* புறசீனியம் அரங்கைப் பயன்படுத்தியமை.

போன்ற விடயங்களைக் குறிப்பிட்டு விளக்கியிருத்தல்.

**06.** சிறு குறிப்புக்கள் ஒவ்வொன்றிலும்

* விடயம் தொடர்பான அடிப்படை எண்ணக்கரு.
* நிகழ்த்தப்படும் முறை.
* தனித்துவமான சிறப்பியல்புகள்.

என சிறு குறிப்புக்கள் ஒவ்வொன்றும் அனுகப்பட வேண்டும்.